2021 செப்டம்பர் 8]

அதுபோல, திருத்தேர்களின் கொட்டகைகள் பாதுகாப்பற்றதாக இருப்பதால், மழைக் காலங்களில் தண்ணீர் உள்ளே புகுந்து, அந்தக் காலத்து தேர்களில் மரத்தாலான சிற்பங்கள் பழுதடைந்து இருந்ததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், முழுமையாக கள ஆய்வு செய்து, அந்தத் திருத்தேர்களைப் பாதுகாக்க கொட்டகைகள் அமைப்பதற்கு மாத்திரம், ரூ.10.00 கோடியை இந்த ஆண்டே ஒதுக்கீடு செய்திருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 18 திருத்தேர்கள் பழுதடைந்திருக்கின்றன. ஓடாதத் திருத்தேர்களையும் ஓட்டுகின்ற அரசு, இந்த அரசு என்பதை நிரூபிக்கின்றவகையில், ஓடாத அந்தத் திருத்தேர்களுக்கான திருப்பணிகளை ரூ.8 கோடி செலவில், இந்த ஆண்டு மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக பக்தர்கள் மனநிறைவோடு இருக்கின்றார்கள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் மன மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள். கேட்க வேண்டுமே என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்க வேண்டாம், (மேசையைத் தட்டும் ஒலி) மனநிறைவோடு நன்றி கூறுங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

35—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***3282—திரு. ரூபி ஆர். மனோகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு, பத்மநேரி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு விடையளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை நாங்குநேரி தொகுதி, களக்காடு, பத்மநேரி அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு பத்மநேரி என்பது ஒரு குக்கிராமம். இங்கு விவசாயம் செய்கின்ற மக்கள்தான் அதிகமாக வசிக்கிறார்கள். பத்மநேரியிலிருந்து களக்காடு பகுதிக்கு வருவதற்கு* bus *வசதி சரியாக இல்லை. அதனால், பத்மநேரி பள்ளியைத் தரமுயர்த்த வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருப்பதால், ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆம் தேதியன்று மாண்புமிகு ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விவரமாக பதில் அளித்திருக்கிறேன். பொதுவாக நாம்* consider *செய்ய வேண்டியது, இந்த மூன்று அரசாணைகளைத்தான்.* G.O. No. *235,* No. *379* and No. *49–ஐத்தான், நாம் பார்க்க வேண்டியுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னபடி* G.O. No. *235–ன்படி*

2021 செப்டம்பர் 8]

பார்த்தோம் என்றால், 10 ஆம் வகுப்பில் 100 மாணவர்கள் இருக்க வேண்டும். ஆனால், 34 மாணவர்கள்தான் இருக்கின்றார்கள். அடுத்த ஒரு மேல்நிலைப் பள்ளி 8 கிலோ மீட்டர் distance*–ல் இருக்க வேண்டும். ஆனால், 8 கிலோ மீட்டருக்குள்ளாகவே களக்காடு மற்றும் இடையன்குளத்தில் இரண்டு பள்ளிகள் இருக்கின்றன. இதோடுமட்டுமல்லாமல்* G.O. No. *379–ன்படி ரூபாய் இரண்டு இலட்சம் பணம் கட்டியிருக்க வேண்டும். அத்தொகை இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றது.* G.O. No. *49–ன்படி 3 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். ஆனால், இரண்டு ஏக்கர் நிலம்தான் இருக்கின்றது. ஆகவே, இந்த நெறிமுறைகளை* meet out *செய்யாத ஒரு சூழ்நிலையில்தான் நான் இந்தப் பதிலைச் சொல்லியிருக்கிறேன்.*

இன்று World Literacy Day *ஆகும். இருந்தாலும், உறுப்பினர் மாணவர்கள்மீதுள்ள அக்கறையில் கேட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக நான்* CEO*–விடம் தெரிவித்து அங்குள்ள நிலைமை என்ன என்பதை அறிந்து, கலந்தாலோசித்து, அவசியம் வேண்டுமெனில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று ஆவன செய்வதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றி. அது கிராமம் என்பதால், நீங்கள் கண்டிப்பாக, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கண்டிப்பாக வேண்டும் என்று கேட்கிறீர்கள். நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *ஆமாம், கண்டிப்பாக வேண்டும். (குறுக்கீடு) நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்காக மட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் மூர்த்தி அண்ணன் அவர்கள்கூட* Model School *கேட்டிருக்கிறார்கள்.*

[*2021 செப்டம்பர் 8*

அதுபோன்று நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அரகண்டநல்லூரில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது; அது ஆண்கள் மற்றும் பெண்கள் (Co–Ed.) பள்ளியாகும். அதனைப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.

செஞ்சி தொகுதியைச் சார்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அனந்தபுரம் மேல்நிலைப் பள்ளியை பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். இதுபோன்று பள்ளிக்கூடங்களுக்கு என்னென்ன தேவையோ, விதிமுறைகளுக்கேற்ப உடனடியாக சம்பந்தப்பட்ட CEOs மூலமாக ஆய்வு செய்யப்பட்டு, உள்ளபடியே நெறிமுறைகளுக்குள் வருகிறபட்சத்தில் கண்டிப்பாக இந்த ஆண்டே செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) மண்பாண்டம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக மண் எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எடப்பாடி K. பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர், திரு. கே.பி. அன்பழகன், திரு. ஆ. கோவிந்தசாமி, (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

முந்தைய ஆட்சியில் உயர் கல்வித் துறையில் செயல்படுத்திய திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களோ என்னிடம் வந்து, (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களோ, என்னிடம் வந்து பேச அனுமதி கேட்டார்கள். நான்